


**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.
தொலைபேசி எண்.044–2951 5590

**ஆணை நாள். 12.11.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA 7209/A/2024**

திரு. S. கௌரி பிரசாந்த் .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மத்திய நில அளவை மற்றும் நிலவரித்
திட்ட ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 12.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. S. கௌரி பிரசாந்த் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ப. பிரபாவதி, பொதுத் தகவல் அலுவலர் / தொழில்நுட்ப மேலாளர் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகாவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8–ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இன்றைய விசாரணையில் திருமதி நா. சாரதா, தலைமை உதவியாளர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். இனி வருங்காலங்களில் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலரே ஆஜராக வேண்டும் என்று ஆணையம் அறிவுறுத்துகிறது.

2. மனுதாரர் 23.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமம் புதிய புல எண் 379 இதற்குரிய பழைய புல எண் 81/1 மற்றும் அனைத்து உட்பிரிவுகளுக்கமான நில அளவை பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு முன்புள்ள பழைய நில அளவை புலப்படச் சுவடிகள் நகல், OSR. RSR. SLR. 1939 UDRக்கு முன், நிலஉடமை மேம்பாட்டுத் திட்டத்தின் மூல ஆவணங்கள், பைமாஸ் ஆவணங்கள், இனாம் பதிவேடு நகல் நிலவரித் திட்ட அலுவலர் அலுவலக வழக்கு கோப்புகள் நகல் என்பது போன்ற தகவல்களை வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 03.01.2024 நாளிட்ட பிரிவு 19(1)இன் கீழான முதலாம் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் பிரிவு 19(3)இன் கீழ் 31.05.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.11.2026 இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 18.12.2023 மற்றும் 20.12.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. மேலும், மனுதாரரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது, மனுதாரருக்கு இனம் 4க்கான (Settlement / Survey Land Register) (SLR Copies) (1939–UDRக்கு முன் வரை) நகல் வழங்கவில்லை என ஆணையத்தில் தெரிவித்தார். எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:–

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனம் 4க்கான SLR நகல் தொடர்பான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-இன்படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு*

*தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்** SA- **7209/A/2024**

பொதுத் தகவல் அலுவலர்/
மத்திய நில அளவை மற்றும் நிலவரித்
திட்ட ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

**மனுதாரர்:**
பொதுத் தகவல் அலுவலர்/
மத்திய நில அளவை மற்றும் நிலவரித்
திட்ட ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

Copy to File
Je/PA 12.11.2026